| O.S.No. 250/2017 | PW2: திரு.சுந்தர்ராஜன்<br>த/பெ. திரு. வடிவேல் | 22-07-2025 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**1–ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :**

1. இன்று சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை. வாதி இசபெல்லா, அவருடைய மகள் எட்வர்டு அமிலா பிஜியன் ஆகியோர்களை எனக்கு தெரியும். வாதிகள் அழைத்ததன்பேரில் இன்று சாட்சியம் அளிக்க வந்தேன். 5–ம் பிரதிவாதி இந்நீதிமன்றத்தில் வழக்கறிஞர் மூலம் ஆஜராகியுள்ளாரா என்று எனக்கு தெரியாது. 5–ம் பிரதிவாதி அலுவலகத்தில் நான் பணி செய்த வகையில் அங்கு நடந்த விஷயங்கள் எனக்கு தெரியும். 5–ம் பிரதிவாதி அலுவலகத்தில் நடந்த அலுவல் ரீதியான தீர்மானங்கள் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் எனக்கு தெரியும். அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை, தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். தாவா சொத்தை 1–ம் பிரதிவாதியிடம் அடமானம் வைத்து கடன் வாங்கிய விவரம் தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது. நான் வாதிக்கு பவ்வியப்பட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்று அல்ல என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை** : இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2025.07.22 15:41:43 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**